செய்தி வெளியீடு எண்–700 நாள்–30.10.07

# 006–2007ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்ளுக்கு 20 சதவீத போனஸ் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் எ.வ. வேலு அறிவிப்பு

2006-2007–ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கக் கோரி, தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் (325 / LPF) உள்ளிட்ட அனைத்து சங்கங்களும் அரசுக்கு கோரிக்கை சமர்ப்பித்திருந்தன.

2006-2007–ம் ஆண்டுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள், தீபாவளிப் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட, மைய அரசு போனஸ் சட்டத்திற்கு திருத்தம் வெளியிடுவதை எதிர்நோக்கி, 8.33 சதவீதம் போனஸ் மற்றும் 11.67 சதவீதம் கருணைத் தொகை, ஆக மொத்தம் 20 சதவீதம் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு அதிகபட்சமாக வழங்கப்பட்ட தொகையான ரூ.6,000/–ஐ விட இந்த ஆண்டு ரூ.2,400/- கூடுதலாக வழங்கப்படும். நேரடி கொள்முதல் நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் 3,620 பேருக்கு 8.33 சதவீதம் போனஸ் மற்றும் குறைந்தபட்ச கருணைத்தொகை ரூ.1,800/-ம் வழங்கப்படும். மேலும், தற்செயல் பணியாளர்களுக்கு (Casual Labourers) கருணைத்தொகையாக ரூ.1,000/- வழங்கப்படும்.

இதன் மூலம், 16,857 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள், பருவகால பணியாளர்கள் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு போனஸும், கருணைத் தொகையும் ரூ.10.89 கோடி வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு போனஸ் பெறாத 1,533 பணியாளர்கள் போனஸ் மற்றும் கருணைத் தொகை பெறுவார்கள். சென்ற ஆண்டைவிட கூடுதலாக ரூ.3.33 கோடி போனஸ் மற்றும் கருணைத்தொகை அதிகமாக வழங்கப்படுகிறது.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை– 9.